# செய்திக்குறிப்பு

செ.வெ.எண்-06 நாள்:05.01.2018

**கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பொங்கல் பண்டிகையை சீரோடும், சிறப்போடும் கொண்டாட மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு.**

தமிழர் பண்டிகை பொங்கல் திருநாள், அறுவடைத் திருநாளாகவும், உலகத்து மக்களுக்கு உணவளிக்கும் உழவர்களைப் போற்றிடும் திருநாளாகவும், விவசாயிகள் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாகவும் விளங்குகிறது.

பொங்கல் திருநாளை தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகவும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டை, காவலர் குடும்ப அட்டை மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீளக் கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிடப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் 06.01.2018 முதல்அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும். இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பு, பொங்கல் திருநாளுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம் தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரார்களுக்கும் வழங்கப்படும்.

இப்பரிசுத் தொகுப்பினை சிரமமின்றி குடும்ப அட்டைதாரார்கள் பெற்றிட ஏதுவாக 500 குடும்ப அட்டைகளுக்கு அதிகமுள்ள நியாயவிலைக்கடைகளில் **"சுழற்சி முறையில்"** பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட உள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பொங்கல் பண்டிகையை சீரோடும், சிறப்போடும் கொண்டாட வாழ்த்துகிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.கோவிந்தராஜ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.